செ.வெ.எண். 640 நாள் - 02.11.2023

# பத்திரிக்கைச் செய்தி

நீலகிரி மாவட்ட வருவாய் அலகில் காலியாகவுள்ள 3 ஈப்பு ஓட்டுநர் பணியிங்களை நிரப்ப, விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்கண்ட 3 பணியிடங்கள் ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) (முன்னுரிமை பெற்றவர்) (Schedule Caste – Arunthathiyar on preferential Basis (Priority), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமை பெற்றவர்) (Most Backward Classes and Denotified Communites (Priority)) மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (முன்னுரிமை பெற்றவர (Backward Classes (Other than Backward Class Muslims) (Priority) எனும் இனசுழற்சி அடிப்படையில் நிரப்பப்படும்.

மேற்படி பணியிடங்களுக்கு விண்ணப்பம் செய்வோர் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு குறைந்த பட்சம் 08-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், கூடுதலாக HMV / LMV Licence வைத்திருக்க வேண்டும் மற்றும் ஓட்டுநர் பணியில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் பணி அனுபவம் கொண்டவராக இருக்க வேண்டும். 01.07.2023 அன்றைய நிலையில் குறைந்தபட்ச 18 வயது பூர்த்தி ஆகியிருக்க வேண்டும். மேலும் 01.07.2023 அன்றைய நிலையில் அதிகபட்சமாக பிற்படுத்தப்பட்டோர் (BC) மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) 34 வயதுக்குள்ளும் (முன்னாள் இராணுவத்தினராக இருப்பின் 48 வயதுக்குள்ளும்) மற்றும் ஆதிதிராவிடர் (SC&SCA) மற்றும் பழங்குடியினர் (ST) 37 வயதுக்குள் (முன்னாள் இராணுவத்தினராக இருப்பின் 53 வயதுக்குள்ளும்) இருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை, உரிய சான்றிதழ்களின் நகல்களுடன், நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பதிவு தபால் மூலம் 30.11.2023 அன்று மாலை 5.00 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். தாமதமாக பெறப்படும் மனுக்கள் பரிசீலனை செய்யப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியுடையவர்களை நேர்முகத் தேர்வுக்கு வருமாறு பின்னர் தனியே அழைப்பாணை அனுப்பப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.**

NilgirisPRO ProNilgiris NilgirisPRO